# தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்

எண். 208/2, ஜவஹர்லால் நேரு சாலை, அரும்பாக்கம், சென்னை 600 106
தொலைபேசி எண்: 2363 5011 நிகரி : 2363 8282, 2363 8283
மின்னஞ்சல் - tnsec.tn@nic.in இணையதளம் - www.tnsec.tn.nic.in


## செய்தி வெளியீடு

செய்தி வெளியீடு : 6 / 2022 நாள்: 26.01.2022

## குடியரசு தின விழா

**2022-ம் ஆண்டு, குடியரசு தின விழாவினை முன்னிட்டு, தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தில், தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் முனைவர் வெ. பழனிகுமார் இ.ஆ.ப., (ஓய்வு) அவர்கள் தேசியக் கொடி ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார்.**

குடியரசு தின விழாவினை முன்னிட்டு, இன்று (26.01.2022) தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய வளாகத்தில், தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் முனைவர் வெ. பழனிகுமார் இ.ஆ.ப., (ஓய்வு) அவர்கள் தேசியக் கொடி ஏற்றி வைத்து மரியாதை செலுத்தி, காவல்துறையினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார். இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அலுவலர்கள், காவல்துறையினர் மற்றும் அலுவலகப் பணியாளர்களுக்கு இனிப்புகள் வழங்கியும் தனது மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொண்டார்.

இவ்விழாவில், தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய செயலாளர் திருமதி. எ.சுந்தரவல்லி இ.ஆ.ப., முதன்மை தேர்தல் அலுவலர் (ஊராட்சிகள்) திரு. கி.அ. சுப்பிரமணியம், முதன்மை தேர்தல் அலுவலர் (நகராட்சிகள்) திருமதி. கு. தனலட்சுமி, நிதி ஆலோசகர் மற்றும் தலைமை கணக்கு அலுவலர் திரு கோ. ஜெய்குமார், சட்ட ஆலோசகர் திரு க. வெங்கடேசன், உதவி ஆணையர் (தேர்தல்) திரு. அகஸ்ரீ சம்பத்குமார், தலைமை நிர்வாக அலுவலர் திருமதி வி. மைதிலி, மக்கள் தொடர்பு அலுவலர் திரு இராம. பிரசன்ன வெங்கடேசன், மற்றும் ஆணையத்தின் கண்காணிப்பாளர்கள், அலுவலகப் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

**(தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய ஆணைப்படி)**

26/1/2022

மக்கள் தொடர்பு அலுவலர்